# யெமன் அகதிகளை நேரில் சென்று பார்வையிட்ட பிரபல ஹொலிவூட் நட்சத்திரம் ஏன்ஜலினா ஜோலி

## லத்தீப் பாரூக்

பிரபல ஹொலிவூட் திரைப்பட நடிகை ஏன்ஜலினா ஜோலி ஒரு கிறிஸ்தவர். இருப்பினும் அவர் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யெமன் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை நேரடியாகச் சென்று பார்ரவயிட்டுள்ளார். இந்த விடயத்தில் உலகின் ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் இந்த விடயத்தை கண்டும் காணாத சிலையில் இருக்கின்றபோது இவரது விஜயம் மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். 2022மார்ச் மாத முற்பகுதியில் அவர் தென் யெமன் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். எட்டு வருடங்களாக யெமனில் நீடிக்கும் மோதல்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டுள்ள மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களை நேரடியாகத் தெரிந்து கொள்வதே இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

யெமனின் நிலை தனது இதயத்தை சுக்குநூறாக்கிவிட்டதாகவும் எரிச்சலூட்டுவதாகவும் அமைந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். இதற்கு காரணம் இது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு பேரழிவு இதை தடுத்திருக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2014 முதல் யெமனில் வன்முறைகள் தலைவிரித்தாடுகின்றன. ஸ்திரமற்ற நிலையும் அங்கு ஏற்பட்டுள்ளது. ஈரானிய ஆதரவு பெற்ற ஹவுத்தி கெரில்லாக்கள் தலைநகர் சனா உற்பட நாட்டின் பெரும்பாலான பகுதிகளைக் கைப்பற்றியதை அடுத்து இந்நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது யெமன் மீது நடத்தப்பட்டு வருகின்ற தாக்குதல் யுத்தங்கள் சுமார் ஏழு வருடங்களுக்கு முன் சவூதி அரேபியா தலைமையிலான சவூதி-ஐக்கிய அரபு அமீரக கூட்டணிப் படைகளால் ஆரம்பிக்கப்பட்டது இதற்கான பெருமளவு கனரக ஆயுதங்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிடம் இருந்து கிடைத்துள்ளன. இதற்கென அமெரிக்கா சவூதி அரேபியாவுடன் சுமார் 100 பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுத உடன்படிக்கையை செய்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

யெமனில் உள்ள நெடுஞ்சாலைகள், மீன்பிடி வளங்கள், வடிகான் மற்றும் கழிவு நீர் கட்டமைப்புக்கள், திருமண மண்டபங்கள், மயானங்கள், பாடசாலை சிறுவர்கள் பயணிக்கும் வாகனங்கள் என எல்லாமே சவூதி-அமீரக கூட்டணித் தாக்குதலில் இலக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை உலகளாவிய ரீதியில் மனித உரிமை அமைப்புக்களின் மாபெரும் கண்டனத்துக்கும் ஆளாகி உள்ளன.

இந்தத் தாக்குதல்கள் மற்றும் மோதல்கள் என்பன இதுவரை உலகம் கண்டிராத அளவுக்கு மனிதனால் உருவாக்கப்பட்ட மனிதப் பேரவலத்தை உருவாக்கி உள்ளது. இதனால் அந்த நாட்டின் சுமார் 80 வீதமான மக்கள் அல்லது சுமார் 30

மில்லியன் மக்கள் மனிதாபிமான உதவியும் பாதுகாப்பும் தேவைப்படுபவர்கள் என்ற நிலையை ஏற்படுத்தி உள்ளது. மேலும் 13 மில்லியன் மக்கள் பட்டினியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று ஐ.நா மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

அகதிகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகரின் (UNHCR) விஷேட நல்லெண்ணத் தூதுவராக யெமன் சென்ற ஏன்ஜலினா ஜோலி யெமன் மக்களுக்கான ஆதரவை வெளிப்படுத்தும் வகையிலேயே தனது விஜயம் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாற்கள் உதயமாகும் போது அங்கு களத்தில் இருந்து உலகத்தோடு தொடர்பு கொள்ள என்னால் முடியுமான எல்லாவற்றையும் செய்துள்ளேன் என்று அவர் தனது இன்ஸ்டகிராம் பதிவில் குறிப்பிட்டுள்ளார். உக்ரேனில் இடம்பெற்று வரும் பயங்கரங்களை நாம் தொடர்ந்து வெளிக் கொண்டு வருவது போல் அந்த மோதல்கள் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என நாம் கேற்பது போல் மிகவும் அவசியமாக அமைதி தேவைப்படும் யெமனிலும் அதே நோக்கத்தில் தான் நான் நிற்கின்றேன் என்று அந்தப் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகவும் மோசமான மனிதாபிமான நெருக்கடி இங்கு காணப்படுகின்றது. 2022ல் இங்கு நிமிடத்துக்கு ஒரு சிவிலியன் கொல்லப்படுகின்றார் அல்லது காயப்படுகின்றார். இந்த நாட்டின் பொருளாதாம் யுத்தம் காரணமாக சீரழிந்து போய் உள்ளது. தான் உயிர் வாழ வேண்டுமானால் ஏதோ ஒரு வகையில் தனக்கு மனிதாபிமான உதவி தேவை என்ற நிலைக்கு 20 மில்லியன் யெமன் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்று ஏன்ஜலினா மேலும் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்தும் அகதிகளாகவும் வாழும் யெமன் குடும்பங்கள் பலவற்றை அவர் நேரடியாகச் சென்று பார்வையிட்டார். மோதல்கள் எவ்வாறு அவர்களது வாழ்வைப் புரட்டிப் போட்டுள்ளது என்பதை அந்த மக்களிடம் இருந்தே அவர் நேரடியாகக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

யெமனில் மனிதாபிமானத் தேவைகள் அதிகரித்துள்ளன என்பதை உலக அரங்கில் கோடிட்டுக் காட்ட ஏன்ஜலினா ஜோலியின் விஜயம் உதவும் என்று ருNர்ஊசு நம்பிக்கைத் தெரிவித்துள்ளது. யெமனுக்கான அதிகபட்ச உதவிகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கும் வருடாந்த மாநாட்டின் கவனத்தை ஈர்க்கவும் இந்த விஜயம் உதவும் என்று ஐ.நா அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் மேலும் நம்பிக்கைத் தெரிவித்துள்ளது.

யெமனுக்கு உதவிகோரும் உயர் மட்ட மாநாட்டை முன்னிட்டு ஏன்ஜலினா ஒரு அறிக்கையையும் வெளியிட்டுள்ளார். ஐ.நாவின் கண்கானிப்பின் கீழ் சுவிட்ஸர்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளின் ஒத்துழைப்போடு இந்த மாநாடு இடம்பெற்றது. தனது அறிக்கையில் அவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்

ஒரு முறைசாரா குடியிருப்புக்கு நான் விஜயம் செய்தேன். அங்கு 130 குடும்பங்கள் உள்ளன. ஆனால் 20 குடும்பங்களுக்கு மட்டும் தான் அங்கு ஏதோ ஒரு விதத்தில் உணவு கிடைக்கின்றது. அதுவும் கூட தேவையான அளவு நிதி கிடைத்தால் மட்டுமே.



தற்காலிகமாக உருவாக்கப்பட்டுள்ள ஒரு பாடசாலைக்கு நான் சென்றேன். ஐந்து இருள் சூழ்ந்த சிறிய அறைகளை அது கொண்டுள்ளது. அங்கே தரையில் சிறுவர்கள் அமர்ந்திருந்தனர். ஆனால் அவர்கள் பசியோடு காணப்பட்டனர். அங்கு நிரந்தர ஆசிரியர்கள் இருக்கவில்லை. தொண்டர் ஆசிரியை ஒருவர் தான் இருந்தார். அந்த பின்தங்கிய பிரதேசத்தை வந்தடைய தான் தினந்தோறும் ஒரு மணிநேரம் நடந்து வருவதாக அவர் என்னிடம் கூறினார். அங்குள்ள சிறுவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை உருவாக்கவே தான் முனைவதாக அவர் கூறினார். காரணம் அந்த சிறுவர்களுக்கு அங்கு எதுவுமே இல்லை. உணவு இல்லை. பேனை, பென்சில்கள் இல்லை, புத்தகங்களும் இல்லை, கதிரை மேசைகளும் இல்லை. ஆசிரியைக்கு சம்பளமும் இல்லை. 13 வயதான சிறுவர்கள் மூன்று வயதானவர்களோடு அமர்ந்துள்ளனர். எழுதவும் வாசிக்கவும் கற்றுக் கொள்வதில் அவர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். அவர்களால் எப்போதும் கண்டு கொள்ளவே முடியாத எதிர்காலத்தின் மீது அவர்கள் இன்னமும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

மிகவும் தரக்குறைவான விதத்தில் அமைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்கள் வாழும் ஒரு கொட்டிலுக்கும் நான் விஜயம் செய்தேன். இவர்களுக்கு அங்கு எந்த வருமானமும் இல்லை. உணவும் இல்லை. தண்ணீருக்காவும் இயற்கைத் தேவைகளுக்காகவும் பல மைல் தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலை. மலசல கூட வசதிகளோ அல்லது குளியல் வசதிகளோ அங்கு இல்லை. இங்கு பாடசாலைகள் எதுவுமே இல்லை. பல வருட மோதல்கள் காரணமாக சிறுவர்கள் எல்லோருமே கல்வியற்ற நிலையில் எழுதவும் படிக்கவும்




தெரியாதவர்களாகக் காணப்படுகின்றனர். சில குடும்பங்களை தொடர்ந்து நடத்திச் செல்வதற்காகவே சிறுமிகள் பலருக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டுள்ளது. குடும்பத்தில் உள்ள ஏனைய பிள்ளைகளைக் காப்பாற்ற சீதனமாக ஒரு தொகையைப் பெற்றுக் கொண்டு சிறுமிகளின் வாழ்வு பலி கொடுக்கப்பட்டுள்ளது.

தவிர்க்கக் கூடிய நோய்களாக இருந்தும் கூட அந்த நோய்களுக்கு தனது மூன்று பிள்ளைகளைப் பலி கொடுத்துள்ள ஒரு தாயையும் நான் சந்தித்தேன். இன்னொரு மகள் தற்போது சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் இருக்கின்றார். அவருக்கு ஏற்பட்டுள்ள நோயைக் குணப்படுத்த குறிப்பிட்ட ஆஸ்பத்திரியில் மருந்துகள் உள்ளன. ஆனாலும் அதை பெற்றுக் கொடுக்க அந்தத் தாயிடம் பணம் இல்லை.

இதுதான் அங்குள்ள யதார்த்த நிலை. அங்கு தேவைப்படும் நிதியை விட மிகக் குறைவான அளவு நிதியே உதவியாகக் கூட கிடைக்கின்றது. அரசியல் தீர்வுகள் எதுவும் இன்றி அந்த நாட்டில் மோதல்கள் பல வருடங்களாக நீண்டு செல்கின்றன. எனவே தெளிவாக இருப்போம். ஆக்கிரமிப்பை தடுப்பதிலோ அல்லது தமது வீடுகளை விட்டு வெளியேற வேண்டியவர்களின் கட்டாயத்தை குறைப்பதிலோ நாம் வெற்றி பெற்றுள்ளோம் என்று உலகின் எந்தவொரு இடத்தையும் நாம் சுட்டிக் காட்ட முடியாது என்று அவரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யெமன் தொடர்பான ருNர்ஊசு இன் வேண்டுகோளுக்கு 9 வீதம் மட்டுமே நிதி உதவி கிடைத்துள்ளது. யெமன் தனது சொந்த சோகங்களை எல்லாம் கடந்து சோமாலியா, சிரியா, எதியோப்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த எந்த ஆதரவும் அற்று தவித்த ஒரு லட்சம் அகதி மக்களுக்கும் இடம் அளித்துள்ளது. எனவே தான் இந்த நிலை தனது இதயத்தை சுக்குநூறாக்கி விட்டதாகவும் எரிச்சலூட்டுவதாகவும் அமைந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். இதற்கு

காரணம் இது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு பேரழிவு இதை தடுத்திருக்க முடியும். அரசியல் தீர்வுகள் இன்றி வெறும் நிவாரண உதவிகளால் எதையும் சாதித்து விட முடியாது. இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று கைகோர்த்து செல்ல வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யெமனில் மோதலை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பதைத் தவிர முக்கியமானது வேறு எதுவும் இல்லை. அப்போது தான் மக்கள் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் நிவாரணங்களில் தங்கியிருக்காமல் வாழும் நிலை ஏற்படும். ஒரு நாட்டின் மக்கள் பெரும்பாலும் விரும்புவது இவ்வாறான நிலையதை; தான்.

யெமன் தொடர்பான அடுத்த உதவி மாநாடு அந்த நாட்டு மக்களின் வாழ்வாதாரங்களைக் கட்டி எழுப்புவது பற்றியும் அந்த நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்துவது பற்றியதுமாகவே அமைய வேண்டும். பட்டினியாலும் தவிர்க்கக் கூடிய நோய்களாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான மக்களுக்குத் தேவப்படும் உதவிகளில் வெறுமனே ஒரு சில சத வீதங்களைப் பெற்றுக் கொள்வதாக அது அமையக் கூடாது. ஆனால் துரதிஷ்டவசமாக நாங்கள் இன்னமும் அந்த இடத்தில் தான் இருக்கின்றோம்.

மோதல்களுக்கு தீர்வுகள் காணப்படாமல் இருக்கும் நிலை மற்றும் மக்களுக்கு பாதுகாப்பற்ற நிலை என்பன உலகளாவிய ரீதியில் முகாமைத்துவம் செய்ய முடியாத அளவுக்கு மனிதாபிமான தேவைகளையும் நிவாரணங்களையும் வேண்டி நிற்கின்றன. இது தான் இன்று நாம் யெமனில் காணுகின்ற நிலை.

அரசுகள் என்ற ரீதியில் இப்போது உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அது தான் மிக அவசியமாகத் தேவைப்படும் மனிதாபிமான தேவைகளுக்கு உதவும் வாய்ப்பும் மோதல்களை விரைவாக முடிவுக்கு கொண்டு வரும் வாய்ப்பும். நீங்கள் இதை சரியாகப் பயன்படுத்திக் கொள்வீர்கள் என்று நான் நம்புகின்றேன். யெமன் தேசத்து மக்களுக்காகவும் அங்கு நான் சந்தித்த குடும்பங்களுக்காகவும் அதை செய்யுமாறு நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன் என்று ஏன்ஜலினா ஜோலி தனது அறிக்கையை நிரைறவு செய்துள்ளார்.